★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 8உ சனி (21—1—56) ★ ★ வெளியூர்: தை 9உ ஞாயிறு (22—1—56) [இதழ் 188

சென்னையில் சகல கட்சி மாநாடு

திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்க மறுத்த இந்தியப்பேரரசின் அக்கிரமத் தீர்ப்பை எதிர்த்து நடவடிக்கை மேற்கொண்டு தேவிகுளம், பீர்மேடு உள்ளிட்ட தமிழ்ப் பகுதிகளைப் பெறுவதற்காக வழிகாணும் பொருட்டு, எல்லாக் கட்சியினரும் அடங்கிய மாநாடு ஒன்று வரும் ஜன 24-ம் தேதியன்று நடைபெறும் என்றும், அந்த மாநாட்டில் தமிழ்நாட்டின்மீது அக்கரை கொண்ட அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் எனக் கோரி எல்லாக் கட்சித் தலைவர்களின் கூட்டறிக்கை ஒன்று இரண்டொரு தினங்களில் வெளிவரும் என்றும் தெரிகிறது.

வடவரின் ஓரவஞ்சனையைத் திரையிட்டு மூட டி. டி. கே. முயற்சி

ஒரிசா மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தபால், வானொலி, இரயில் நிலையங்கள் மூடப்பட்டன

உயர் நீதிமன்றம் வேலைசெய்ய முடியவில்லை

கட்டாக், ஜன. 20—

கட்டாக் நகரில் உள்ள வழக்கறிஞர்கள் காலவரையறையின்றி நீதிமன்றங்களுக்குச் செல்வதில்லை எனத் தீர்மானித்திருக்கின்றனராம். ஒரிசா மாநிலத்தின் எல்லைக் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்பதற்காகவே இந்தக் கிளர்ச்சி என்று தெரியவருகிறது.

தங்களது எதிர்ப்பு இயக்கத்தை நடத்துவதற்காக ஒரு செயற்குழுவை அமைத்ததுடன், வழக்கறிஞர்கள் ஒரு பெரும் கண்டன ஊர்வலமும் நடத்தினர் என்று தெரியவருகிறது.

மாநிலத்தின் பல இரயில் நிலையங்களுக்கும் மாணவர்கள் சென்று, நிலையங்களை மூடிவிடுமாறு இரயில் நிலைய அதிகாரிகளை வற்புறுத்தினர். பெரும்பாலான இரயில் நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

கட்டாக் நகரில் பல மாணவர்கள் கடந்த இருநாட்களாக மேற்கொண்டிருந்த உண்ணாவிரதத்தை, இன்று கைவிட்டிருக்கின்றனர்—மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

பொதுவாக, ஒரிசா ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடைபெற்று வருவதாகவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் விவகாரத்தில் அதிகாரிகள் இன்னும் தலையிடவில்லை என்றும் தெரிய வருகிறது.

சென்னை வரவேண்டிய இரயில்கள் எல்லாம் வேறு திசையில் திருப்பி அனுப்பப்படுகின்றன.

இரயில் நிறுத்தம்

பல நேர் இரயில்கள் ரத்து

ஒரிசாவில், இந்தியப் பேரரசிற்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களினால், அந்த மாநிலத்தின் வழியாகச் செல்லும் எல்லா இரயில்களும் தடைபட்டு நிற்கின்றன.

கல்கத்தாவிலிருந்து சென்னை வரும் இரயில்கள், அதேபோல சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் இரயில்கள், பூரி செல்லும் இரயில்கள் இவை எல்லாம் ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. எந்த நேர் இரயிலும் செல்ல முடியவில்லை என்று தெரியவருகிறது.

வானொலி நிலையம் தாக்கப்பட்டதாம்

வானொலி நிலையம், பாங்குகள், உயர் நீதிமன்றம் இவற்றை எல்லாம் ஒரிசா மாணவர்கள் மூடும்படி செய்திருக்கின்றனர். வானொலி நிலையம் வேலை செய்ய முடியவில்லை.

பிரதம நீதிபதியையும், இதர நீதிபதிகளையும் உயர் நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கே மாணவர்கள் அனுமதிக்கவில்லை.

ஒரிசா எங்கும் பல நகரங்களில் கடைகள், வர்த்தக நிலையங்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன.

இரயில்கள் எவையும் சரிவர ஓடிக்கொண்டிருக்கவில்லையாதலால், பத்திரிகைகள் எவையும் செல்ல முடியவில்லை.

ஒரிசாவின் புதிய தலைநகரமான புவனேஸ்வருடன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. தபால் நிலையத்தின் முன் மாணவர்கள் மறியல் நடைபெறுவதால், தபால்கள் பட்டுவாடா செய்யப்பட முடியவில்லை.

தென்னாட்டில் மூன்று தொழில்கள் அமைவதில் பரவசப்படுகிறார்

பழைய திட்டங்களைப் புதியவை என்று பொய்யுரை பகர்கிறார்

சென்னை, ஜன. 20—

தென்னாட்டிற்கு, ஐந்தாண்டுத் திட்டங்களில் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளால் இழைக்கப்பட்டுவரும் மகத்தான அநீதிகளை—ஓரவஞ்சனைகளை—ஏகாதிபத்தியப் போக்கினை மூடி மறைக்க, அவர்களுக்குத் தென்னாட்டிலிருந்து கிடைத்திருக்கும் 'எடுபிடி'யான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சென்னை நகரில் நேற்று பெருமுயற்சி மேற்கொண்டிருக்கிறார்.

இரண்டாம் திட்டத்தில் சென்னைக்கு—தென்னாட்டிற்குப் பெரிய தொழிற்சாலைகள் மூன்று ஏற்படப் போவதாகக் கூறி, வடநாட்டவர்மீது எழுந்துள்ள தென்னாட்டவரின் கோபத்தை—எதிர்ப்பைச் சமாளித்துவிடலாம் என நினைத்துப் பரவசப்பட்டிருக்கிறார்.

புதிதாக ஏதோ மூன்று பெரிய திட்டங்கள், தென்னாட்டுத் தொழில் வளர்ச்சிக்காகத் தயாரிக்கப்பட்டிருப்பதுபோல அவர் பிரதாபம் பேசியிருக்கிறார்.

எண்ணற்ற ஆண்டுகளாகப் பல்வகை சாக்குப் போக்குகள் கூறி வேண்டுமென்றே இந்தியப் பேரரசு ஒத்திப்போட்டுக் கொண்டுவரும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி தோண்டும் திட்டத்தையும், ஒரு அலுமினியம் தொழிற்சாலை, சேலத்தில் ஒரு இரும்பு உலை—இவை மூன்றையும் இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு, தான் இந்தியப் பேரரசின் மூலவர்களிடம் கூறி வருவதாக அவர் பேசியிருக்கிறார்.

தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் சொன்னார்:—

"இந்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் தென்னிந்தியாவில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொண்டிருக்கிறார்கள்; இந்த முடிவை இரு சர்க்கார்களும் எந்தக் காரணத்தாலும் சர்க்கார் மாற்றிக்கொள்ள மாட்டார்கள். மேலும், தென்னிந்தியாவில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்துமாறு இந்திய சர்க்காரை நான் வற்புறுத்திக் கூறிவருகிறேன். தென்னாட்டில் ஒரு இரும்பு—எஃகுத் தொழிற்சாலை ஏற்படுத்தவில்லை என்பதினால் இந்த நாட்டு மக்கள் கோபப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கோபத்தைத் தணிப்பதற்காக ஒரு அலுமினியத் தொழிற்சாலையையேனும் நிறுவுமாறு நான் இந்திய சர்க்காரை வற்புறுத்திவருகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

நாசிக் நகரில் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இருவர் பலி

தடையுத்தரவை மீறி ஆர்ப்பாட்டம்

நாசிக், ஜன. 20—

நகரில் விதிக்கப்பட்டிருந்த 144 தடையுத்தரவை மீறி, மாநிலப்புனரமைப்புக்குறித்த இந்தியப் பேரரசின் தீர்ப்பை எதிர்த்தக் கூட்டத்தினர் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக இருவர் கொல்லப்பட்டதாயும், பத்துப்பேருக்கு மேல் படுகாயமுற்றதாயும் தெரிய வருகிறது.

பம்பாயில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

இடதுசாரிகளின் வேண்டுகோளை தொழிலாளர்கள் நிராகரித்தனர்

வெள்ளியன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் பலி

பம்பாய், ஜன. 20—

பம்பாய் நகரம் அமைதியடைந்து வருவதாக நேற்று கூறப்பட்ட தகவல்கள் பொய்யானவையாகியிருக்கின்றன; ஐந்தாவது நாளாகப் பம்பாய் நகரம், மராட்டிய மக்களின் ஆர்ப்பாட்டங்களினால் கிடுகிடுத்திருக்கிறது.

போலீசார் இன்று பகல் 12-மணி வரையில் சுமார் 12 பேர்களைச் சுட்டு விழ்த்தியதாகச் சர்க்கார் தரப்பில் கூறப்படுகிறது. எண்ணற்றோர் படுகாயமுற்றிருக்கின்றனர். சுமார் 65 முறைகளுக்கும் மேலாகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்டமாத்திரத்தில் சுட்டு விழ்த்துமாறு போலீசாருக்கு நகரப் போலீஸ் கமிஷனர் உத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

கல்வி முறை மாற்றம்

இடைநிலைக் கல்வி முறையை எவ்வாறு சீர்திருத்துவது என்பது பற்றி மத்திய அரசாங்கம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை சர்க்கார் ஆகிய மூன்று தரப்பினரும் கலந்தாலோசித்து முடிவுக்கு வந்திருப்பதாகவும், இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில், மாநில அரசாங்கம் விரிவான முடிவுகளை வகுக்க முடியுமென்றும் கூறப்படுகிறது.

இப்போதைய ஆண்டுப் பிறப்புக் காலத்தை அதிகரிக்காமலும், பாடத் திட்டங்களை மாற்றியமைத்தும், போதனாமுறையை மாற்றியும் சீர்திருத்தம் செய்யப்படுமாம்.

கோலாப்பூரில் துப்பாக்கி பிரயோகம்

ஊரடங்குச் சட்டம் உடைபடுகிறது

கோலாப்பூர், ஜன. 20—

பம்பாயை மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது என்ற சர்க்காரின் முடிவை எதிர்த்து கடந்த மூன்று நாட்களாக நடைபெறும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இன்று உச்சநிலை அடைந்தன.

நகரில் விதிக்கப்பட்டிருக்கும் 18 மணி நேர ஊரடங்குச் சட்டம் ஆர்ப்பாட்டக்காரர்களால் உடைத்தெறியப்பட்டிருக்கிறது.

இந்த ஊரடங்குச் சட்டம் வரும் 24-ம் தேதி வரை நீடிக்கும் என்று போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

ஊரடங்குச் சட்டம் [illegible] காத நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் போலீசாருடன் மோதிக் கொண்டபோது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். இதன் விளைவாக மூன்று பேர் படுகாயமுற்றனர் என்று தெரிய வருகிறது.

பெல்காம் நகரில் தெருச் சண்டை

பெல்காம், ஜன. 20—

கடந்த வியாழன் முதல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்துவரும் பெல்காம் நகரில், நிலைமை சற்று அமைதியாகி வருகிறதென்றாலும், ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்தவண்ணமாகவே இருப்பதாகத் தெரிகிறது.

மராட்டியரும், கன்னடியரும் நடுத்தெருவில் சண்டையிட்டுக்கொள்கின்றனராம். பல இடங்களில் இந்த நேரடிச்சண்டை கோரமாக நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

மேலும் இரண்டு நாட்களுக்கு ஊரடங்குச் சட்டம் நகரில் அமுலில் இருக்கும் என்று போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

விமானம் இறங்க முடியவில்லை

சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் விமானம் ஒரிசா தலைநகரான கட்டாக் விமான நிலையத்திற்கு வந்தபோது, அங்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருந்ததால், கட்டாக்கில் இறங்காமலேயே விமானம், நேராகக் கல்கத்தாவிற்குச் சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 21-1-'56 சனி

சபாஷ் மாணவர்கள்!

சந்தனக் காட்டைக் கடந்து குளிரும் மணமும் பரப்பி மக்களை மகிழ்விக்க வருகின்ற தென்றலைப்போன்ற வாலிபப் பருவத்தினரான மாணவமணிகள், வெள்ளை உள்ளமும், கொள்ளை உணர்ச்சியும் கொண்ட இளஞ் சிங்கங்கள்.

மாணவர்கள்தான் ஒரு நாட்டின் எதிர்காலம்—நம்பிக்கை—நல்வாழ்வு — அத்தனையும்!

மெய்ப் பொருளைப் பகுத்தறியும் அறிவை கற்றனைத்து ஊறப் பெற்றுக்கொண்டிருக்கும் அந்தக் கட்டிளங் காளைகள், தங்களுக்குச் சரி எனப் பட்டுவிட்டால், அதனைச் சாதிக்க வேங்கையாகப் பாய்வர்; வேழமாக உருவெடுப்பர்; வீரத்தின் விளிம்பைத் தொட எத்தனிப்பர்.

'மாணவர் பட்டாளம் ஒரு நாட்டின் நலன் காக்கும் கேடயம்; உரிமைக்குப் போராடும் உடைவாட்கள்; எதிரியின் ஈரமில்லா நெஞ்சத்தைப் பிளந்தெறியும் ஈட்டி முனைகள்'—என்று வரலாற்றில் சிறப்பிக்கப்படுபவர்கள்.

அத்தகு மாணவமணிகள் தான் 'தேவிகுளம், பீர்மேடு—தமிழருக்கே,' 'டில்லி சர்க்காரின் எதேச்சாதிகாரத் தீர்ப்பு—வீழ்க', 'காமராசர் சர்க்காரே — பதவியிலிருந்து விலகு', 'பொறுத்தது போதும் — பொங்கி எழுவீர்'—என்று இடிமுழக்கம் செய்திருக்கின்றனர்—கடந்த நான்கு நாட்களாகத் தமிழகமெங்கணும்!

டில்லி சர்க்காரின் எதேச்சாதிகார முடிவுக்கு எதிராகத் தமிழகத்தில் முதன் முதல் திரண்டெழுந்து வேலைநிறுத்தம், கண்டன ஊர்வலம் போன்ற மகத்தான சம்பவங்களை உருவாக்கிய பெருமை தமிழ் நாட்டு மாணவமணிகளைத்தான் சாரும்.

வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் மூடி மறைத்து வைக்கக் கனவு காணும் தங்களது நயவஞ்சகத் திட்டத்தினை, 'தேவிகுளம்—பீர்மேடு விவகாரத்தில் அவர்கள் தந்த தீர்ப்பு திரை நீக்கிக் காட்டியதை, தமிழ் நாட்டில் மாணவர் சமுதாயம் மட்டுமே தெளிவாக உணர முடிந்தது போலும்!

தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் பற்றிய விவகாரத்தின் எல்லா அம்சங்களும் தமிழ் நாட்டு மக்களுக்கு முழுவதுமாக — விளக்கமாகக் கடந்த காலத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறதெனக் கூற முடியாது. எனவேதான், தமிழகத்தில், தேவிகுளம், பீர்மேடு விவகாரம் பற்றிய டில்லி தீர்ப்பு இதர பகுதி மக்களிடையே தேவையான அளவு உணர்ச்சியைக் கிளப்பவில்லை என்பதும் முழுவதும் தவறுடையதல்ல.

மாணவர் சமுதாயம், இயற்கையாகவே பெற்றிருக்கிற எதையும் நுணுகிப் பார்த்துத் தெளிவு பெறுகிற ஆவலின் காரணமாக டெல்லித் தீர்ப்பையும், அதன் உள்ளடக்கத்தையும் உணர்ந்து தெளிந்து, தமிழகத்திற்கு ஏற்படவிருக்கும் மகத்தான நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகத் திரண்டெழுந்திருக்கின்றனர்.

மேலும், இந்தியத் துணைக் கண்டத்தின் இதர பகுதிகளில், டெல்லி தீர்ப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம் மேற்கொண்டுள்ள போராட்டச் சம்பவங்களும் மாணவர்களது ஆர்வத்தையும், உணர்ச்சியையும் செறிவாக்கியிருக்கக்கூடும்.

எப்படி இருந்தாலும், தமிழக மாணவர்கள், தாயகத்தின் நியாயமான கோரிக்கைக்காகத் திரண்டெழுந்து குரல் கொடுத்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

மேலும், தமிழக மாணவர்கள், கடந்த நான்கு நாட்களில் நிகழ்த்திக் காட்டிய உணர்ச்சி பொங்கும் மகத்தான சம்பவங்கள் எவராலும் தூண்டப்பட்டவையல்ல; 'தமிழகம் என் தாயகம்' என்ற உண்மையினால் உந்தப்பட்டவர்கள்தான். அந்தத் தாயகம் சீரழிக்கப்படுகிறது; அதற்கு அநீதி இழைக்கப்படுகிறது—என்ற செய்தியினால் திரண்டெழுந்தவர்களே தவிர, எந்த ஒரு அரசியல் இயக்கத்தினுடையவும் கருவிகளாக இந்த விவகாரத்தில் அவர்கள் பயன்படுத்தப்படவில்லை என்பதும் உண்மையாகும்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, விருதுநகர், காரைக்குடி, புதுக்கோட்டை என்று தமிழ் நாட்டின் பல ஊர்களிலும் உள்ள கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் டில்லி ஏகாதிபத்தியவாதிகளின் எதேச்சாதிகாரப் போக்கினை எதிர்த்து அணி திரண்டனர்—ஆர்ப்பரித்தனர்.

தாயகத்திற்குக் கேடு தேடுவோரைக் கருவறுக்க இந்தக் காளைகளின் அணியைவிட வேறென்னவேண்டும்? அன்று கடற்கரை மணலில் கடும்வெய்யிலில் இந்த வீரர்களைக் கண்டோர், அவர்கள் விழிகளிலே தேங்கிநின்ற வீரம், தோள்களில் திரண்டு நின்ற தீரம், செயல்களில் முன்னோடிக் கொண்டிருந்த துடிதுடிப்பு; இவற்றிற்கெல்லாம் காரணமான உள்ளத்தில் கொப்பளித்துக் கொண்டிருந்த ஆர்வம் இவற்றையும் காண முடிந்தது.

என்ன காரணத்தாலோ, மாணவர்களின் இந்த இயற்கையான வீராவேசம் 'மெயில்' இதழுக்குப் பிடிக்கவில்லை. அதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை.

வீறு கொண்டெழுந்த மாணவ மணிகளே! சபாஷ்!

'பொருளாதார உதவி ஏன் அளிப்பது'?

அமெரிக்க செனேட்டர் எதிர்ப்பு

நியூயார்க், ஜன. 16—

"கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் சேராமலிருப்பது மன்றி; மற்ற நாடுகள் சேருவதையும் தடுக்க முயற்சிக்கும் நடுநிலைமை

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

மகசூல் பங்கீடு விகிதம்

இரண்டாம் திட்ட விபரங்களுக்கு எதிர்ப்பு?

புதுடில்லி, ஜன. 20—

நிலச்சுவான்தாரர்களுக்குச் சாகுபடியாளர்கள் கொடுக்கும் 'வாரம்', மொத்த மகசூலில் 5-ல் ஒரு பங்கிற்கும் அதிகமாக இருக்கக் கூடாது என்றும், இந்த அளவுதான் அதிக பட்ச வரம்பாக இருக்கவேண்டுமென்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும், இப்பொது விதி எல்லாருக்கும் ஒன்றுபட்டு நியாயம் வழங்குவதாக அமையாது என்று கருதப்படுகிறதாம்.

'சொந்தக்காரர்களுக்கு மகசூலில் 5-ல் 1 பங்குதான் கிடைக்கும் என்று வரையறுத்து விட்டால், நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை மட்டுமே தங்கள் வாழ்க்கை வழியாகக் கொண்டிருக்கும் குடும்பத்தினர் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகவேண்டி நேரிடும், என்று, அண்மையில் இப்பிரச்சினை குறித்து மேலிடத்தவரிடத்தில் நடைபெற்றப் பேச்சு வார்த்தைகளின்போது சுட்டிக் காட்டப்பட்டதென்றும் தெரிகிறது.

ஆனால், 80 சத விகித மகசூலையும்—அதாவது மகசூலில் 5-ல் 1 பகுதி போக மீதி 4 பங்கினையும் சாகுபடியாளர்களுக்குக் கொடுத்துவிட்டால் வாழ்க்கை நடத்தமுடியாது என்று கருதும் சில உடைமைக்காரர்கள் தங்களுடைய நிலங்களையெல்லாம் சர்க்காரிடம் ஒப்புவித்துவிடலாம் என்றும், அதற்காகச் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள நஷ்டஈட்டுத் தொகையை அவர்களும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அப்பேச்சு வார்த்தைகளின்போது யோசனை கூறப்பட்டதாம் அத்துடன், தங்களுக்குக் கிடைக்கும் நஷ்டயீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிந்த பின்னர் வேண்டுமானால், சில உடைமைக்காரர்கள் தங்கள் நிலங்களைச் சர்க்காருக்குக் கொடுக்கலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வகையான நஷ்டஈட்டுத் தொகையினைப் பல கட்டங்களில் கொஞ்சம்கொஞ்சமாகக் கொடுத்துவிடலாம் என்று அண்மையில் யோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட சட்டப் பிரச்சினைகளும் இப்போது பரிசீலனையிலிருந்து வருகின்றன.

இது தவிர, சில உடைமைக்கு அதிக பட்ச வரம்பு எவ்வளவு காலத்தில் நிர்ணயிக்கலாம் என்பது குறித்தும் பரிசீலனைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் தேசீயமயமாகும்

குடியரசுத் தலைவர் அவசரச்சட்டம் பிறப்பிக்கிறார்

புதுடில்லி, ஜன 19—

இந்தியாவில் உள்ள எல்லா ஆயுள் 'இன்ஷ்யூரன்ஸ்' தொழிலையும் தேசீய மயமாக்குவதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

முதல்படியாகக் குடியரசுத் தலைவர், எல்லா 'இன்ஷ்யூரன்ஸ்' நிறுவனங்களின் நிர்வாகத்தையும் சர்க்காரின் கீழ் கொண்டுவரும் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

குறுகிய காலத்திற்கு சர்க்காரின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும்போதும், பின்னர் 'இன்ஷ்யூரன்ஸ்' நிறுவனத்தின் உரிமையை முழுவதுமாகச் சர்க்கார் மேற்கொள்ளும்போதும் நியாயமான நஷ்ட ஈடு தரப்படும் என்று மத்திய சர்க்கார் நிதி மந்திரி தேஷ்முக், வானொலியில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் (அவசர) சட்டம் 1956' என்ற பெயர் கொண்ட குடியரசுத் தலைவரின் சட்டம், உடனடியாக எல்லா இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களின் நிர்வாகத்தையும் சர்க்காரின் கீழ் கொண்டு வருகிறது.

வெளிநாட்டவர் நடத்துகிற இன்ஷ்யூரன்ஸ் நிறுவனமானாலும், உள்நாட்டு நிறுவனத்தில் வெளிநாட்டவர் இன்ஷ்யூர் செய்திருப்பதானாலும் அவை எல்லாம் சர்க்காரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

பிராவிடண்ட் நிதிச் சங்கங்களும், அவை போன்ற இதர சங்கங்களும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களாகவே கருதப்பட்டு, அவற்றை எல்லாம் சர்க்கார் மேற்கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம், சர்க்கார், இந்த நிறுவனங்களின் நிர்வாகத்தை மேற்கொள்ளுவதற்குப் பொறுப்பானர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், அதுவரையில் இப்போதுள்ள நிர்வாகிகள் சர்க்காரின் ஏஜெண்டுகள் என்ற முறையில் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்றும் சட்டம் விதிக்கிறது.

மக்கள் சபையின் அடுத்த கூட்டத்தில் சர்க்கார், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலை தேசியமயமாக்குவதற்கான மசோதா ஒன்றைக் கொண்டு வருவார்கள் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

'நீதிமன்றங்களில் இந்தியை திணிக்காதீர்'

'சட்ட இலக்கியம் இந்தியில் அறவே கிடையாது'

'ஐம்பதாண்டுக் காலம் அப்பணிக்குத் தேவைப்படும்'

'அவசரப்பட்டால் நீதி நிர்வாகம் சீரழியும்'

பாட்னா உயர் நீதிமன்றத்தின் முறையீடு

"இச்சூழ்நிலையில், நீதிமன்றங்களில் இந்தியைப் புகுத்துவது இயலாததாகும். ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தேவநாகிரி எழுத்தில் இந்தியைப் புகுத்துவது இறுதியான நோக்கமாக இருந்தபோதிலும், அதைச் செயல்படும் மாற்றமாக ஆக்குவதற்கு, இருபது ஆண்டுக் காலத்திலிருந்து ஐம்பதாண்டு காலம் வரை தேவைப்படும். உயர் நீதிமன்றங்களிலும், மற்ற அற மன்றங்களிலும் அவசர இந்தித் திணிப்பானது அறிவுடைய செயலாகாது."

"ஆங்கில நீதி அமைப்பை மொழி பெயர்ப்பது என்பது இலகுவான செயல் அல்ல; இந்தியில் சட்ட சர்பந்தமான இலக்கியம் எதுவும் கிடையாது. அதைப் படைப்பதற்கு சுமார் ஐம்பது ஆண்டுக்காலம் தேவைப்படும். ஒத்த பொருளையும் கருத்தையும் தரும் வகையில் ஆங்கிலச் சட்ட நூற்களை மொழி பெயர்ப்பது என்பது இந்தத் தலைமுறையால் ஆகக்கூடிய காரியமா என்பது ஐயத்திற்குரியதாகும். அவசரத்திலும், சிதறிய நிலையிலும் மொழி மாற்றம் ஏற்படுமானல், நாட்டின் நீதிமன்ற நிர்வாகத்திற்கே பேரழிவை உண்டாக்கும்?"

சிங்கள வெறியருக்கு இலங்கை தமிழர்கள் பதில்

ஒரு மந்திரி உட்பட ஏழு பேர் ஆளும் கட்சியிலிருந்து விலகினர்

கொழும்பு, ஜன. 19—

இலங்கையின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசீயக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலிருந்து, தபால்-செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரியான தோழர் எஸ். நடேசன் உள்ளிட்ட ஏழு தமிழ் உறுப்பினர்கள் 'வெளிநடப்பு' செய்தனர்.

அடுத்த திங்களில் நடைபெறவிருக்கும் கட்சி மாநாட்டில் 'சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க வேண்டும்' என்று கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று தமிழ் உறுப்பினர்கள் கோரினர்; ஆனல், அதை ஏற்க செயற்குழு மறுத்ததினலேயே தமிழ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர் என்று கூறப்படுகிறது.

மேலும் தோழர் நடேசன், 'அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் என்ற ஒரு அத்தியாயத்தையும் சேர்க்க வேண்டும்' என்று கொண்டு வந்த தீர்மானத்தையும் செயற்குழு நிராகரித்தது.

எனவே, இந்த ஏழு தமிழ் உறுப்பினர்களும் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துவிட்டிருக்கின்றனர்.

இவர்களைத் தொடர்ந்து மேலும் மூன்று தமிழ் உறுப்பினர்கள் பதவி துறப்பதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்துவிட்டிருக்கின்றனர்.

(2-ம் கலத் தொடர்ச்சி)

நாடுகளுக்கு, எதற்காக அமெரிக்கா உதவி அளிக்கவேண்டும்?"

என்று, செனேட்டர் நோலண்ட், எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

"கூட்டுப் பாதுகாப்புப் பொறுப்புகளை ஏற்காத நாடுகளுக்கு உதவி அளித்து வந்தால், மற்ற நாடுகளும் அதேபோன்று சுகமாக உதவி பெறுவதற்கு ஆக்கமளிப்பதாக நேரிட்டுவிடும்,"

என்று அவர், மேலும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

அண்ணுமலை பல்கலைக் கழக மாணவர்கள் வேலைநிறுத்தம்

‘காமராசர் சர்க்காரே இராஜினுமாச் செய்’

நேரு சர்க்காருக்கு மாணவர்கள் கண்டனம்

அண்ணுமலைநகர், ஜன. 19—

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்காமல் விட்டதோடு, செங்கோட்டையில் ஒரு பகுதியைக் கேரளத்தோடு சேர்த்துத் தீர்ப்பளித்த நேருவின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து அண்ணுமலை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இரண்டாயிரம் மாணவர்கள் இன்று கல்லூரிக்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்தனர்.

மாணவர்கள் யாவரும் கடமை உணர்ந்து கட்டுப்பாடோடும், கண்ணியத்தோடும் ‘காமராசர் சர்க்காரே இராஜினுமாச் செய்,’ ‘நேருவின் தீர்ப்பு நேர்மையற்றது,’ ‘வடநாட்டு ஏகாதிபத்தியமே முடிவை மாற்று,’ ‘தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே,’ ‘செங்கோட்டை—தமிழர் கோட்டை,’ ‘தமிழ்நாட்டைத் துண்டாடாதே’ ‘சென்னை மாநிலத்துக்குத் தமிழகம் என்று பெயரிடு’ என்ற ஒலி முழக்கங்கள் செய்துகொண்டு சிதம்பரம் நகர் முழுவதும் ஊர்வலமாகச் சென்ற காட்சி மக்களிடையே பரபரப்பையும் விழுப்புணர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது.

ஊர்வலத்துக்குப் பின்னர் திருவேட்களத்தில் நடந்த கூட்டத்தில் பல மாணவத் தோழர்கள் இந்திய அரசாங்க முடிவைக் கண்டித்தும் காமராசர் சர்க்காரின் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தும், தமிழர்களின் கடமையுணர்வை நினைவூட்டியும் பேசினர்

கூட்ட இறுதியில் இந்தியப் பேரரசின் முடிவை வன்மையாகக் கண்டித்தும், உடனே தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு தமிழகத்திற்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந. நி.)

நாங்குனேரி வட்டத்தில் வறட்சி !

நிவாரணமளிப்பது பற்றி மந்திரி

சென்னை, ஜன. 18—

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரிப் பகுதி வறட்சிகண்டு கிடப்பதாகவும், அங்குள்ள மக்களுக்கு நிவாரணமளிப்பது பற்றி மாவட்ட நிர்வாக அதிகாரியை கோரிக்கை தெரிவிக்குமாறு தான் கேட்டிருப்பதாகவும் மந்திரி மாணிக்கவேலர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருர்.

தான் அந்த வட்டத்தில் அண்மையில் சுற்றுப் பயணம் செய்தபோது, அங்குள்ள மூன்று பெரிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் முழுவதுமாக வரண்டு கிடப்பதைக் கண்டதாகவும், அங்குள்ள மக்கள் வேலை தேடித் தரவேண்டும் என்றும், நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் தன்னிடம் கோரியதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

திருச்சி மாணவர்கள் வேலை நிறுத்தம்

2000க்கு மேற்பட்டோர் கல்லூரி செல்லவில்லை

நகர் முழுவதும் கண்டன ஊர்வலம்

திருச்சி, ஜன. 19—

தேவிகுளம், பீர்மேடு கேரளத்தோடு சேரவேண்டுமென்று இந்தியப் பிரதமர் நேரு சொன்ன தீர்ப்பைக் கண்டித்து, இன்று காலை திருச்சி ஜமால் மொய்தீன் கல்லூரி மாணவர்கள், கல்லூரிக்குச் செல்லாமல் நேருவின் தீர்ப்பைக் கண்டித்து எழுதிய தட்டிகளைக் கையில் ஏந்திக்கொண்டு நகர் முழுவதும் கண்டன ஒலி முழக்கங்களை எழுப்பிக்கொண்டு ஊர்வலமாக வந்தனர். 2000-க்கு மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் பகல் 1 மணிக்கு நகர் மண்டப மைதானத்தை அடைந்தது. கல்லூரி மாணவச் செயலாளர் நேருவின் போக்கைக் கண்டித்தும், உடனடியாகக் காமராசர் ஆவன செய்து இழந்த தமிழ்ப் பகுதிகளை மீட்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றிய பின் மாணவர்களை அமைதியாக கலைந்து செல்லும்படி கேட்டுக்கொண்டார். (ந. நி.)

ஐந்தாண்டுக்கு முன்பு நடைபெற்ற கொள்முதல் பேரத்திற்கு நஷ்டஈடு

பிரிட்டிஷ் நிறுவனத்தின்மீது இந்திய சர்க்கார் வழக்கு?

புதுடில்லி, ஜன. 18—

பிரிட்டன் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ஜீப்கார்கள் வாங்கியதில் காண்டிராக்டு சம்பந்தமாக ஏற்பட்ட நஷ்டத்திற்கு இந்திய சர்க்கார், ‘எஸ். சி. கே. ஏஜென்சீஸ் லிமிடெட்’ என்ற அந்த நிறுவனத்தின் மீது சிவில் வழக்குத் தொடுப்பதென முடிவு செய்துவருவதாகத் தெரியவருகிறது.

பொதுக் கணக்குப் பரிசீலனைக் குழுவின் யோசனைகளை ஏற்றுக்கொண்டு நஷ்டத் தொகையைக் கட்டிக்கொடுக்குமாறு வழக்குப் போட இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளனராம்.

முதன் முதலில் இந்திய சர்க்கார், ஆண்டி மிஸ்டாண்ட் என்ற மற்றொரு பிரிட்டிஷ் நிறுவனத்துடன் 2,000 பழைய ஜீப் கார்களுக்கான கொள்முதல் காண்டிராக்டு ஒன்றைச் செய்தது. அதன் மூலம் 1,43,162 பவுன் நஷ்டம் ஏற்பட்டது. எனவே, அந்த ஒப்பந்தத்தைக் கைவிட்டு, இரண்டாவது முறையாக, இந்த எஸ். சி. கே. நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது. ஜீப்கார் ஒன்றுக்கு 458 பவுன் விலைவீதம் 1,007 புது ஜீப்கார்களுக்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அந்த நிறுவனம் முதலில் 49 கார்களை அனுப்பிவிட்டு, மற்றக் கார்களை வினியோகம் செய்ய மறுத்துவிட்டது.

இந்த ஜீப் கார்கள் பேரம் நடந்து சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாகிறது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வடநாட்டு அகதிகளுக்கு

ரூ. 75 கோடி !

மாதந்தோறும் 21,000 அகதிகள் வருகின்றனராம் !

புதுடில்லி, ஜன. 18—

டிசம்பர் இறுதிவரை கிழக்கு வங்கத்திலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்கு மட்டும் இந்திய சர்க்கார் ரூ. 75 கோடி வரை செலவிட்டிருக்கிறதாம் !

ரூ. 16 கோடி செலவில் 3,88,000 அகதி குடும்பங்களுக்கு நிலங்களில் புனர் வாழ்வளிக்கப்பட்டுள்ளது.

30,000 கிழக்கு வங்க அகதிகளுக்குத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது; மேலும் 5,500 அகதிகள் இப்பயிற்சி பெற்றுவருகின்றனர்; இதற்காக மத்திய புனர் வாழ்விப்பு இலாகா ரூ.1,16,00,000 கோடி செலவிட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் கிழக்கு வங்கத்திலிருந்து சுமார் 21,000 அகதிகள் வந்துகொண்டிருக்கின்றனர். சென்ற வருடத்தில் மாத்திரம் 2,30,000 பேர் குடிபெயர்ந்து வந்துள்ளனர். மொத்தம் 36 இலட்டம் பேர் கிழக்கு வங்கத்திலிருந்து வந்துள்ளனர்.

அகதிகள் புனரமைப்பு இலாகா செயலாளர் இவ்விவரங்களைத் தந்துள்ளார்.

புதுக்கோட்டை மாணவர்கள் வேலை நிறுத்தம்

கண்டன ஒலிமுழக்கங்களுடன் ஊர்வலம்

புதுக்கோட்டை, ஜன. 19—

இன்று, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மாணவர்கள், உயர்நிலைப்பள்ளி, மற்றுமுள்ள பற்பல பள்ளி மாணவர்களுமாகச் சுமார் 2,000 பேர்களுக்கு மேல் காலை 10 மணியளவில் கல்லூரி வாயிலில் ஒன்று திரண்டு மிக்க அமைதியான முறையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திஞர்கள். கடைகள் யாவும் மூடப்பட்டன.

ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியே அணிவகுத்துச் சென்று பகல் 2 மணிக்கு முடிவுற்றது.

ஊர்வலத்தினர் தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை முதலிய பகுதிகளை கேரளத்துடன் இணைப்பதைக் கண்டித்து ஒலி முழக்கங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டம் மிக்க அமைதியாக முடிவுற்றது.

பிரதமர் நேருவுக்கும், காமராசருக்கும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கக்கோரி தனிப்பட்ட முறையிலும், மாணவர் குழுவின் சார்பிலும் தந்திகள் பல கொடுக்கப்பட்டுள்ளன. மாணவத் தோழர்கள் சிலர், குருதியில் கையெழுத்திட்டு காமராசருக்கும், நேரு பண்டிதருக்கும் கண்டனம் தீட்டியுள்ளனர். (ந. நி.)

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்

3, 4, 5, 6

வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

நாட்களில் நடைபெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

பம்பாயில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

'வேலைநிறுத்தத்தைக் கைவிடுங்கள்—வேலைக்குத் திரும்புங்கள்' என்று இடதுசாரித் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளை தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; தொடர்ந்து ஐந்தாம் நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் ஆர்ப்பாட்டங்களையும் முன்னின்று நடத்தியிருக்கின்றனர்.

போலீசார் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டிவிரட்டி அடித்துத் துன்புறுத்தியிருக்கின்றனர். பல இடங்களில் பெரும் கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது.

நகரில் பெரும் சேதங்கள்—உயிர், பொருள், உடைமை முதலியனவற்றிற்கு ஏற்பட்டிருக்கின்றன.

ஈடு செய்ய முடியாத மகத்தான நஷ்டங்களுக்கு ஆளாகியும்கூட மராட்டியர்களின் ஆவேசம் இன்னும் தணிந்தபாடில்லை.

வரும் ஜன. 30-ந் தேதிமுதல் சங்கர்ராவ் தேவ் உண்ணாவிரதமிருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

பம்பாய் மராட்டியருக்குத்தான் என்ற உண்மையை நடைமுறைக்குக் கொண்டுவர ஒன்றுபட்டு நிற்கும் மராட்டியர்கள், மிருகத்தனமான அடக்குமுறைகளுக்கும் அஞ்சாது, தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

பம்பாய் நகர பிரமுகர் என்று கூறிக்கொண்டு சில 'பெரிய மனிதர்'கள், கவர்னர் தலைமையில் கூடி நகரில் அமைதியை எப்படி நிலைநாட்டுவது என்று யோசித்தனராம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தப் 'பெரிய மனிதர்'கள் கோரினராம்.

தொடர்ந்து வேலை நிறுத்தம் ஆர்ப்பாட்டங்கள் முதலியன நடைபெறும் என்றே தோன்றுகின்றது.

இடதுசாரித் தலைவர்கள், பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் கைவிடுமாறு கேட்டுக்கொண்டுவருகின்றனர்.

தொடர்ந்து நகரில் பஸ், டிராம் போக்குவரத்துகள் நிலைகின்றன இரயில் போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கிறது. விக்டோரியா டெர்மினஸ் நிலையத்திலிருந்து இரயில்கள் புறப்பட முடியவில்லை இங்கிருந்து 30 மைல் தொலைவில் உள்ள கல்யாண் நிலயத்திலேயே வந்துசேர வேண்டிய இரயில்களும் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

பெத்துநாய்க்கன்பேட்டை
அம்மன் கோவில் தெரு,
துர்கா பவுண்டரி திடலில்
21—1—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: ம. நடராசன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. உ. சண்முகம்
சி. ஆர். பாலசுந்தரம்
(பொருள்: திரு-தமிழக இணைப்புச் சிக்கல்)

★

உடுமலைப்பேட்டை

22—1—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. நாராயணன்
பேசுபவர்:
என். வி. நடராசன்

★

இளங்காகுரிச்சி

சந்தை மைதானத்தில்
24—1—56 செவ்வாய் மாலை
தலைவர்: ஐ. எம். சரீப்
கொடியேற்றுபவர்:
அன்பில் தர்மலிங்கம்
பேசுவோர்:
எம். எஸ். மணி
தி. வீ. முத்துகிருஷ்ணன்

சொற் பயிற்சிக் கூட்டம்

22—1—56 காலை 10 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண் 22, திருவேலியன் பேசின் தெரு) தோழர் கு. நாகராசன் தலைமையில் நடைபெறும். 'மக்களும்—விடுதலையும்' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சிறப்புச் சொற்பொழிவு

மதுரை
பழனி டாக்கீசில்
22—1—56 பகல் 2 மணிக்கு
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
சி. பி. சிற்றரசு
இசை: பி. எஸ். செல்வா
நன்கொடை: அணா 8, 4

சட்டக் கல்லூரித் தமிழ் மன்றம்
சென்னை

பொங்கல் விழா

22—1—56 மாலை 5 மணிக்கு, தோழர் மு.கருணாநிதி பேருரையாற்றுவார். மாலை 6 மணிக்கு, எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும் 'மணி மகுடம்' நாடகமும், என். எஸ். கே.—மதுரம் குழுவினர் நடிக்கும் 'இந்திர தர்பார்' நாடகமும் நடைபெறும்.

—நன்கொடை வசூலிக்கப்படும்.

சென்னையில் மந்திரிமுன்பு ஆர்ப்பாட்டம்

மாணவர்கள் கண்டன ஊர்வலம்

★

சென்னை, ஜன. 20—

இந்தியப் பேரரசின் வர்த்தகத் தொழில் இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி 'ராஜாஜி மண்டபத்'தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இன்று காலை வந்தபோது நூற்றுக்கணக்கான தோழர்கள்—சென்னை தமிழரசுக் கழகம், வடசென்னை குறள்நெறிக் கழகம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மந்திரியிடம், தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் தமிழகத்துடன் இணையாவிட்டால் அவரும், சென்னை மந்திரி சபையினரும் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று கோரினர். மந்திரியும் பிரச்சினை குறித்துத் தான் கவனிப்பதாயும், இந்திய சர்க்காரிடம் கூறுவதாயும் உறுதி தந்தாராம்.

மற்றும், நகரின் பல பாகங்களிலும் மாணவர்களின் ஊர்வலம், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

வடசென்னை தியாகராயர் கல்லூரி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், மற்றும் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளி செல்லாது விடுத்து, ஊர்வலமாக நகர் வீதிகளைச் சுற்றி ஆர்ப்பாட்டம் நடத்தினர், அமைதியாக.

மற்றும் பல்வேறு நகரங்களிலும் மாணவர்கள், இதுபோன்று தமிழ் நாட்டுஉரிமைப் பாதுகாப்பிற்காகக் கிளர்ந்தெழுந்து, ஆர்ப்பாட்டம் முதலியன நடத்தியிருக்கிறார்கள்.

கொடுங்கையூர் (சென்னை) தி.மு.கழக உறுப்பினர்கட்கு

★

22—1—56 மாலை 5½ மணிக்கு, கொடுங்கையூர் தி மு கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்.

நன்றி அறிவிப்பு

'பேப்பியர் பூங்காவில் நடைபெற்ற திராவிடர் திருநாள் விழா வெற்றிபெற எல்லா வகையிலும் உடனிருந்து ஒத்துழைத்தத் தோழர்கள் அனைவருக்கும், பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் எங்களது இதயங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்."

என்று; சென்னை மாவட்ட தி. மு கழக நிர்வாகிகள் இளம்பரிதி, கோ. செங்குட்டுவன், ஆ ச. சுந்தரமூர்த்தி ஆகியோர் அறிவிக்கின்றனர்.

அண்ணா படிப்பகத் திறப்பு விழா

22—1—56 அன்று, திண்டுக்கல், ரவுண்டு ரோடு, புதூர் ரேடியோ திடலில், அண்ணா படிப்பகத் திறப்பு விழாவும், பொங்கல் விழாப் பொதுக் கூட்டமும், தோழர் பி. சமதர்மம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ. சுப்பையா, அ. பால்ராஜ், மற்றும் பலர் பேசுவர்.

****

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—1—1956 ஞாயிறன்று காலை 10 மணிக்கு

சிதம்பரம் 'நாடார் சத்திரத்'தில்

நடைபெறும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கியப் பொருள்கள்:

(1) மாநில மாநாடு
(2) கழகச் சட்டதிட்டம் திருத்தம் செய்தல்
(3) கொள்கை விளக்க நூல் வெளியிடுதல்
(4) மாநிலப் புது அமைப்புப் பற்றி முடிவெடுத்தல்

—தி. மு. க. தலைமை நிலையம்

****

நேருவின் தீர்ப்புக்கு மராட்டியர்களின் தீர்ப்பு

'மத்திய மாகாண மந்திரிகள் இராஜினமா செய்ய வேண்டும்'

'மக்கள் சபை—சட்ட சபைப் பிரதிநிதிகளும் வெளியேற வேண்டும்'

மகாராஷ்டிர காங்கிரஸ் குழுவின் கட்டளை

பூனா, ஜன 19—

பம்பாய் நகரைக் குறித்து இந்தியப் பேரரசு கணித்தத் தீர்ப்பை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்காக, மகாராஷ்டிரப் பிரதேசக் காங்கிரஸ் குழுக் கூட்டம் நடைபெற்றது. மத்தியிலும்—மாகாணத்திலும் பதவியிலுள்ள அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், பார்லிமெண்டரி செயலாளர்கள், சபை உறுப்பினர்கள் ஆக மராட்டியராக உள்ள அனைவரும், பம்பாய் பற்றி இந்தியப் பேரரசு அளித்தத் தீர்ப்பைக் கண்டிக்கும் முறையில், தங்கள் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறுமபடி, மேற்படி காங்கிரஸ் குழு கட்டளையிட்டுத் தீர்மானித்திருக்கிறது.

இந்தியப் பேரரசில் நிதிஅமைச்சராக இருக்கும் சி. டி. தேஷ்முக், சட்ட மந்திரியாக இருக்கிற எச். வி. படாஸ்கர், அகதிகள் புனர்வாழ்வு துணைஅமைச்சராக இருக்கிற ஜே. கே. பான்சலேவும், பதவிகளை விட்டு விலக வேண்டியவர்களாகின்றனர்.

பம்பாயில் உள்ள இரண்டு சட்டசபைகளிலும் மொத்தத்தில் 108 மகாராஷ்டிர காங்கிரஸ் உறுப்பினர்களும், மக்கள் சபையில் பதினறு உறுப்பினர்களும், இராஜ்ய சபையில் ஐந்து உறுப்பினர்களும் உள்ளனர்.

பம்பாய் அமைச்சர் குழுவில், அமைச்சர்களாக பி. எஸ். இரே, எம். எம். நாய்க் நிம்பால்கர், ஒய். பி. ஷாவன், ஜி. டி. தாப்சே, துணை அமைச்சர்களாக பி. டி. தேஷ்முக், முஸ்தபா பசீர், வி. பி. சாதே, முதலமைச்சரின் சட்டசபைச் செயலாளர் திருமதி நிர்மலா ராஜி பான்சலேயும் உள்ளனர். இவர்களும் பூனா முடிவுப்படி, பதவிகளை விட்டு விலக வேண்டியவர்களாவர்.

காங்கிரஸ் குழு கூடிய கட்டிடத்தைச் சுற்றி ஏறத்தாழ 4,000 மக்கள் ஆர்வத்தோடு முடிவறியக் கூடி இருந்தனர் குழு முடிவை என். வி காட்கில் அறிவித்ததும், குழுமியிருந்தவர்கள் பெருத்த ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

முடிவெடுக்கப்பட்டதும் ஊர்வலம் கிளம்பும் என்பதை அறிந்திருந்ததால், போலீஸ் காவலும் கட்டிடத்தைச் சுற்றி பலமாக இருந்தது.

ஊர்வலத்தை ஜெ. எஸ் திலக் நடத்திச் சென்றார். என் வி காட்கிலும், அமைச்சர் இரேவும் கூட்டத்தில் பேசினர்.

மகாராஷ்டிரப் பிரதேச காங்கிரஸ் குழு கூட்டத்தில், மகாராஷ்டிரம், பம்பாய் நகரம், விதர்ப்பம், மாரத்துவதா ஆகிய பகுதிகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

நினைவுக் கூட்டம்

22—1—56 மாலை 5½ மணிக்கு, புழல், எண் 7, கல்யாண் தெருவில், தோழர் கே பி. கிருட்டிணன் செல்வி கே. பொற்கொடி 28—12—55 அன்று இயற்கை எய்தியதைக் குறித்து நினைவுக் கூட்டம், தோழர் டி. முருகானந்தம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, இரத்தினகுமார் ஆகியோர் பேசுவர்..

வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

22—1—56 இரவு 9 மணிக்கு, வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எம். துரைசாமி தலைமையில் நடைபெறும். அதுபோது, டிசம்பர் மாத வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்படும்.

திருக்குறள் வகுப்பு

22—1—56 காலை 10 மணிக்கு, சென்னை-மண்ணடி, எண் 94-95, புதுத் தெரு, இராசமன்னர் பாடசாலையில், திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் நடைபெறும். காமத்துப்பாலில் 'ஊடலுவகை' என்ற அதிகாரத்திற்கு, திரு. சி. முருகேசனார் விளக்கவுரையாற்றுவார்.

திராவிடர் திருநாள்

22—1—56 காலை 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (நமசிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி) பொங்கல் விழாக்கூட்டம், தோழர் பூ. அரங்கசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கா அப்பாதுரை, இளம்பரிதி, கே எம் கண்ணபிரான், மற்றும் பலர் பேசுவர்.

வடவரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனிகளைத் தோண்டி எடுப்பதற்குக் கிழக்கு ஜெர்மன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்; இந்தத் துறையில் அவர்களால் நமக்கு உதவி செய்ய முடியுமா என்று அறிந்துவருகிறோம்" என்றெல்லாம் அவர் பேசியிருக்கிறார்.

தூத்துக்குடியில்

'நம் நாடு' கிடைக்குமிடம்

சங்கர் ஏஜன்சி,
35. வெஸ்ட் கிரேட்
காட்டன் ரோடு,
தூத்துக்குடி..

மறைவு

சென்னை, ஜன. 21—

புலவர் கி. தியாகராசன் அவர்களது தந்தையார் திரு.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள், நேற்று மாலை 3 மணியளவில் இயற்கை எய்திய செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்.

தந்தையை இழந்து தவிக்கும் தோழருக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —(ஆ-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ